DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.153/2024** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW1** |
| **Name** | : | முத்துகுமார் |
| **Father's Name** | : | ஆறுமுகம் |
| **Village** | : | கோசல் ராம்நகர் |
| **Taluk** | : | நாங்குநேரி |
| **Age** | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11.02.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 02.05.2024 முதல் 30.06.2026 வரை காலத்திற்கான என் பெயரில் உள்ள குத்தகை பத்திரம் அசல் **வா.சா.ஆ 1**. 26.06.2024 ல் நான் செலுத்திய குத்தகை பணத்திற்கான ரசீது எண்ணம் 1 அசல் **வா.சா.ஆ 2**. புகார் மனு ஏற்பு ரசீது **வா.சா.ஆ 3**. 08.08.2024 ல் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவு அசல் **வா.சா.ஆ 4**. 22.09.2024 அன்று ஏர்வாடி காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு கைநகல் **வா.சா.ஆ 5**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.